## யாழ்ப்பாண மாநகர சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2010 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய யாழ்ப்பாணம் நகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி யாழ்ப்பாணம் நகர சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்குகளுடன் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிசார் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என சந்தர்ப்பங்கள் மற்றும் பெறுமதிகளின் கீழ் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம்**

| | வருமானம் | | செலவினம் | | சொத்துக்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை | பெறுமதி |
| | | ரூபா | | ரூபா | | ரூபா | | ரூபா |
| நிதிக்கூற்றுக் களில் அதிகரித்துக் காட்டல்கள் | - | - | 04 | 890,327 | 01 | 86,463,089 | - | - |
| நிதிக்கூற்றுக் களில் குறைத்துக் காட்டல்கள் | 01 | 151,256 | 01 | 1,040,332 | - | - | - | - |
| நிதிக்கூற்றுக் களில் விடுபாடுகள் | - | - | 01 | 647,238 | 01 | 14,417,581 | 03 | 145,173,819 |

### 1.3.3 வங்கிக் கணக்குகள்

(அ) நகரசபையின் ஐந்து வங்கிக் கணக்குகள் தொடர்பில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மதிப்பிழந்த ரூபா 46,000 பெறுமதியான காசோலை ஒன்று தொடர்பில் நிதிப்பிரமாணங்கள் 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வழங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கும் மேலாக தேறாதிருக்கும் ரூபா 833,425 பெறுமதியான 10 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) பிரகாரம் பொறுத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 71,511,683 ஆக இருந்தது.

### 1.3.5 அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சம்பளங்கள் மற்றும் கூலிகளைச் செலுத்துவதற்காகவும் ஏனைய பல்வேறு நோக்கங்களிற்காகவும் சபை அங்கீகாரமின்றி நிலையான வைப்பிலிருந்து ரூபா 5,478,358 மீளெடுக்கப்பட்டிருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

விடுக்கப்பட்டிருந்த 12 கணக்காய்வு ஐய வினாக்களிற்கு 2011 ஜுன் 30 ஆம் திகதி வரை பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அக் கணக்காய்வு ஐய வினாக்களிற்கு உட்பட்ட கொடுக்கல்வாங்களின் கணிப்பிடக் கூடியதாகவிருந்த பெறுமதி ரூபா 10,796,436 ஆகும்.

**(ஆ) கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 1,572,615 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.7 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) **மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 252)** | |
| (i) 247 (ஏ) ஆம் பிரிவு | இலங்கை உல்லாசப்பிரயாண அபிவிருத்தி அதிகார சபையின் அங்கிகாரமின்றி 5 ஹோட்டேல்களிற்காக ரூபா 44,600 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் சபையினால் அறவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | (ii) 218 ஆம் பிரிவு | 2010 ஆம் அண்டிற்கான நிர்வாக அறிக்கை சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வட மாகாண நிதி ஒழுங்குவிதிகள் | |
| | நி.ஓ.வி 433 | 09 வாகனங்களிற்கான வாகன ஓட்டப்பதிவேடுகள் மற்றும் மாதாந்தப் பொழிப்பறிக்கைகளை சபை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| | நி.பி. 571 | காலங்கடந்த ரூபா 7,919,918 வைப்புக்கள் தீர்க்கப்படாது சில்லறை வைப்புக்கள் கணக்கில் வைத்திருக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 இன் உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் | |
| | 153 ஆம் பிரிவு | வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்நத காரர்களிடமிருந்து ரூபா 108,616 நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 17/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிற்கு ரூபா 164,371 வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாநகர சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 751,253 ஆக இருந்ததுடன் இதனையொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 30,405,278 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மாநகர முதல்வரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| வாடகை மற்றும் வரிகள் | 13,553 | 15,114 | 26,348 | 13,114 | 15,918 | 29,049 |
| குத்தகை வாடகை | 19,840 | 23,975 | 2,165 | 17,765 | 19,806 | 3,000 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,213 | 5,054 | 7,578 | 3,082 | 2,706 | 7,954 |
| ஏனைய வருமானங்கள் | 357,429 | 287,110 | 37,712 | 284,027 | 251,028 | 1,830 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2010 திசெம்பர் 31 வரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தினால் சேகரிக்கப்பட்டு பிரதான செயலாளரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ரூபா 2,271,383 நீதிமன்றத் தண்டப்பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 முத்திரைக் கட்டணங்கள்

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டியிருந்த ரூபா 33,036,632 முத்திரைக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2.4 வருமானக் கடன்பட்டோர்

(அ) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 254(அ) (1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுகள் தொடர்பில் அறவிடப்பட வேண்டிய ரூபா 73,803,080 வாடகை, வீதவரிகள், அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 வரை யாழ்ப்பாண மாநகர சபையினால் பட்டியலிடப்பட்ட வீத வரிகளின் மொத்தம் ரூபா 7,502,717 ஆகவும் 2010 திசெம்பர் 31 இல் நிலுவையாக காணப்பட்ட வீத வரிகளின் மொத்தம் ரூபா 23,924,982 ஆகவும் காணப்பட்டன. இந் நிலுவையில் அரசாங்க மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களிடமிருந்து பெறவெண்டிய தொகை ரூபா 392,154 ஆக காணப்பட்டது.

(இ) இலங்கை உல்லாசப் பிரயாண அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட மற்றும் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள விடுதிகளினால் உழைக்கப்பட்ட வருமானத்திலிருந்து மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் 1% வரியினை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்ட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய வேதனம் | 327,085 | 266,405 | 60,680 | 257,483 | 222,707 | 34,776 |
| ஏனையவைகள் | 49,762 | 65,600 | (15,838) | 44,794 | 36,345 | 8,449 |
| உப மொத்தம் | **376,847** | **332,005** | **44,842** | **302,277** | **259,052** | **43,225** |
| **மூலதனச் செலவு** | 21,387 | 26,892 | (5,505) | 34,102 | 30,218 | 3,884 |
| முழு மொத்தம் | 398,234 | 358,897 | 39,337 | 336,379 | 289,270 | 47,109 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியனர் எண்ணிக்கை**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவியினர் தரம் | 30 | 23 |
| இரண்டாம் தரம் | 219 | 164 |
| ஆரம்பத் தரம் | 974 | 761 |
| ஏனையவர்கள்(சமயாசமா/தற்காலிகம்) | - | 422 |
| | 1223 | 1370 |

பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

தாபன விதிக்கோவையின் 2.1 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாட்டின் படி நிலையான பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் வரையறுத்த காலத்தில் சேவைக்கு சமூகமளிக்காதிருக்கையில் பதவியிலுள்ள வேறோர் உத்தியோகத்தர்

அப் பதவிக்கான பணிகளில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். இருப்பினும் அங்கீகரித்த பதவியணிக்கு மேலதிகமாக வெளியிலிருந்து 408 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆண்டு முழுவதும் குறித்த பணிகளில் ஈடுபடுத்தி ரூபா 40,790,592 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

### 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,229,556 ஆனதுடன் 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாதுள்ள தொகை ரூபா 3,160,638 ஆகும்.

#### 2.5.2 பெறவேண்டிய பதவியணிக் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய பதவியணிக் கடன் மற்றும் முற்பண மீதிகளின் மொத்தம் ரூபா 19,398,220 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 37,014 ஆகும்.

#### 2.5.3 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் மேலாக அசைவுறாதிருந்த நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,505,084 ஆகும்.

#### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகப் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்தப்படாது 2010 திசெம்பர் 31 இல் காணப்பட்ட புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 103,019,028 ஆகும்.

### 2.6 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்கள்

(அ) இருநூற்றுக்கும் மேற்பட்ட பொருள் இருப்புக்கள் மற்றும் இயந்திரங்கள் ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அவற்றைத் திருத்துவதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை. பண்டங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகள் கணக்காய்விற்கு கிடைக்கவில்லை.

(ஆ) டிரக்ரர்கள் மற்றும் சுமைப்பெட்டிகள் அடங்கலாக ஏழு வாகனங்கள் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் அந்த வாகனங்கள் 5 ஆண்டுகளிற்கும் மேலாக போக்குவரத்திலிருந்து அகற்றி வைக்கப் பட்டிருந்தன.

## 2.7 இணங்காணப்பட்ட இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

மாநகர சபையினால் பேணப்பட்ட தகவல்கள் மற்றும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் படி ரூபா 14,651,217 சேதங்கள் மற்றும் இழப்புக்கள் வெளிப்பட்டன.

## 2.8 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்பக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முற்பணங்கள் பதிவேட்டின் படி 1995 தொடக்கம் 2010 வரை தீர்க்கப்படாதிருந்த முற்பணங்களின் தொகை ரூபா 7,507,004 ஆகும். அதில் அறவிடப்பட முடியுமாயினும் அவ்வாறு அறவிடப்பட வேண்டிய தரப்பினரை இனங்காணாதுள்ள தொகை ரூபா 2,271,448 ஆகும்.

(ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2000 நவம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மாநகர சபையினால் பேணப்பட்டு வருகின்ற அறுவைக் கொட்டில்களிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. அறுவைக் கட்டளைகள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் வேண்டப்பட்டவாறு அறுவைக் கொட்டில்களின் எண்ணிக்கை விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) வீதி விளக்குகளை பராமரித்தல்

2010 ஆம் ஆண்டில் மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தல் 4200 வீதி விளக்குகளை பொறுத்துவதற்காக இலங்கை மின்சார சபை அங்கீகாரமளித்திருந்தது. ஆயினும் 2010 ஜுன் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அங்கீகரித்த எல்லையிலும் பார்க்க 1300 வீதி விளக்குகள் மேலதிகமாக பொருத்தப்பட்டிருந்தமை வெளிப்பட்டது. அங்கீகரிக்கப்படாத விதி விளக்குளை அங்கீகரித்துக் கொள்வதற்காக

மின்சார சபைக்கு கோரிக்கையொன்றை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வீதி விளக்குகள் பராமரிப்புச் செலவினத்தினை மீளப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் மாநகர சபையின் அதிகாரப்பிரதேசத்தில் வீதி விளக்குகள் பராமரிப்புச் செலவினத்திற்காக 2010 ஆம் ஆண்டில். ரூபா 360,000 செலவிடப்பட்டிருந்தது.

## 2.9 செயலாற்றல்

கணக்காண்டின் தொடக்கத்தில் நகர சபையினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்த குறிக்கோல்கள் மற்றும் அதன் மீதான செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்ய முடியவில்லை.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

மாநகர சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) மனித வளம்
(உ) நிலையான சொத்துக்கள்
(ஊ) சில்லறைப் பெறுவனவுகள்
(எ) வாகனப் பாவனை
(ஏ) மானியங்கள் மற்றும் நன்கொடைகள்